In the Court of the Subordinate Judge, Srivaikundam
Case No : SC.228/2019
Deposition of P.W.3
****

**Name** திரு.இசக்கி

**Father's Name**

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Accused are present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 12th day of October 2023.

**முதல் விசாரணை**

நான் வெல்லூரில் வசித்து வருகிறேன். நான் தொடர் வண்டியில் தின்பண்டம் விற்கும் தொழில் செய்து வருகிறேன். எதிரி பரமசிவன் என்ற மெட்ராஸ் பரமசிவன் என்பவரை எனக்குத்தெரியும். அவர் எங்கள் ஊர்க்காரர்தான். இந்த வழக்கின் பிற எதிரிகளை எனக்குத் தெரியும். இந்த வழக்கின் பட்டியல்சாட்சி 4. கணேசனை எனக்குத்தெரியாது. தேதி மாதம் எனக்கு நினைவு இல்லை கடந்த 2017 ம் வருடம் ஒரு நாள் நான் திருவைகுண்டம் காவல்நிலையத்திற்கு சென்றிருந்த போது காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். அந்த ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்பது எனக்குத்தெரியாது. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை. என் முன்பு யாரையும் கைது செய்யவும் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆகும்.

**<u>சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கவேண்டி அரசு தரப்பில் வேண்டுகோளுகிணங்க அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை-</u>**

1. என்னை போலிஸார் விசாரித்தனர் என்றும் போலிஸாரின் விசாரணையின் போது கடந்த 0.10.2017 ந் தேதி ஆதிச்சநல்லூரில் உள்ள எதிரி பரமசிவத்திற்கு சொந்தமான செங்கல் சேம்பர் முன்பு நானும் புதுக்குடி செல்லையாத்தேவர் மகன் கணேசனும் நின்று கொண்டிருந்த போது அங்கு நின்றுகொண்டிருந்த ஆஜர் எதிரி பரமசிவன் என்பவரை திருவைகுண்டம் காவல்துறையினர் மடக்கி பிடித்து விசாரிக்க அவர் எங்கள் முன்பு எவ்வித தூண்டுதலோ துன்புறுத்தலோ இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் அவர்கள் காலை 8 மணிக்கு பிறப்பித்தார் என்றும் அதில் அவர் தன்னைப்பற்றியும் தனது குடும்பத்தைப்பற்றியும் தானும் தனது நண்பர்களான இசக்கிபாண்டி மற்றும் குண்டு காசியும் சேர்ந்து 09.10.2017 ந் தேதி தங்கள் ஊரில் மது அருந்திவிட்டு பெண்களை கேலி செய்ததாகவும் இரவு சுமார் 10 மணியளவில் அங்கு வந்த திருவைகுண்டம் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் தங்களை சத்தம் போட்டார்கள் என்றால் சரியல்ல.
2. அப்போது தான் முதுகுக்கு பின்னால் வைத்திருந்த அருவாளால் உதவி ஆய்வாளரை வெட்டி கொலை செய்ய முயன்றதாகவும் குண்டு காசியும், இசக்கி பாண்டியும் போலிஸையும் உதவி ஆய்வாளரையும் தள்ளிவிட்டார்கள் என்றும் அப்போது, கூடுதலாக போலிஸார் அந்த இடத்திற்கு வந்து விட்டதால் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டதாகவும் கூறி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் கணேசனும் கையெழுத்திட்டோம் என்றும் பின்பு சம்பவத்திற்கு பயன்படுத்திய அருவாளை தோட்டத்தில் உள்ள மோட்டார் அறையில் இருந்த எடுத்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார் என்றும் அதை ஆய்வாளர் அவர்கள் 9.45 மணிக்கு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும் இது தொடர்பாக ஆய்வாளர் தன்னை விசாரித்தார்கள் என்றால் என்றால் சரியல்ல.
3. ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்களது ஊர்க்காரர்கள் மற்றும் எனது உறவினர் என்றால் சாதான்.

4. எதிரிகள் எங்கள் உறவினர் என்பதால் உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-கே.நம்பிராஜன்
**உதவி அமர்வு நீதிபதி,**
**திருவைகுண்டம்.**